பாம் பிரிண்ட்
சுவடி
SUVADI
சுவடி 1 ஓலை 1

# முற்பணம் கட்டின் பிற்பகல் விளையும்



## வீட்டுக் கடனை விரைவாய் அடைக்க ஒரு வழி!

*மாதம் மாதமோ, மாதம் இருமுறையோ தப்பாமல் வரும் வீட்டுக் கடன் கொடுப்பனவு வழமையில் 25 வருடங்கள் நீளும். வீடு வாங்கிய தொகையை விட, அதிகமான வட்டியை அந்த நீண்ட காலத்திற்குள் வங்கிகள் அறவிடுகின்றன.*

பல ஆயிரம் டொலர் வட்டியைச் சேமிக்க முடியும். கட்ட வேண்டிய காலத்தைச் சில வருடங்களால் குறைக்க முடியும்.

அனாவசியமாய் வங்கிக்கு கொடுக்கும் பணத்தைச் சேமிக்கப் பல வழிகள் உண்டு. அதில் ஒரு வழி, மாதாந்தக் கட்டுப்பணத்தை விட, மேலதிகமாகச் செலுத்துதல்.

அதிலும் கடனின் ஆரம்ப காலத்திலே, வங்கிகள் உங்கள் கட்டுப் பணத்தில், தங்கள் வட்டியை அதிகமாகவும், உங்கள் கடன் முதலைக் குறைவாகவும் அறவிடுகின்றன. எனவே, கடனின் ஆரம்பக் காலத்தில் எவ்வளவு அதிகமாக முற்பணத்தைக் கட்டுகின்றீர்களோ, அவ்வளவுக்கு நீங்கள் பணத்தைச் சேமிக்க முடியும்.

இந்த முற்பணத்தை வருடம் சில தடவைகள் ஒரு தொகையாகவோ, அல்லது மாதாந்தக் கட்டுப்பணத்தை அதிகரிப்பதாலோ செலுத்த முடியும்.

மாதாந்த தொகையை வெறும் ஐம்பது டொலர்களால் அதிகரித்தாலோ, வருடம் ஒருமுறை சில ஆயிரங்களை மேலதிகமாய் செலுத்தினாலோ, 25 வருடங்களுக்குள் பல ஆயிரம் டொலர் வட்டியைச் சேமிக்க முடியும். கட்ட வேண்டிய காலத்தைச் சில வருடங்களால் குறைக்க முடியும்.

வங்கிகள் சும்மா விடுமா? வங்கிகளின் தொழிலே உங்களிடம் வட்டியை அறவிடுவது தானே. இதனால் வீட்டுக் கடன் ஒப்பந்தத்தில் பல விதிமுறைகளை வங்கிகள் அடக்கும். சில நேரம் முற்பணம் செலுத்த தண்டம் அறவிடும். சிலநேரம் அனுமதிக்காது.

சட்டப்படி, வங்கிகள் கடன் ஒப்பந்தம் தரும்போது, முற்பணம் கட்ட முடியுமா, எவ்வளவு, எப்போது கட்ட முடியும், அதற்கான விதிமுறைகள் என்ன, தண்டப்பணம் அறவிடப்படுமா என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

எனவே கையெழுத்து வைக்க முன்னால், ஒப்பந்தங்களை முழுமையாக வாசித்து, சந்தேகங்களை நிவர்த்தி செய்து, விளங்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணத்தை சேமிக்க வேண்டியது உங்கள் கடமை.

எனவே, முன் பணம் கட்டி, பிற்பகல் விளைபயனை அறுவடை செய்யுங்கள்.

# தேனே, உன்னைத் தேடித் தேடி நான் அலைந்தேனே!



நீண்ட நாட்களுக்கு முன் வாங்கிய தேன் கட்டியாகி, சீனித் துகள்களாய் காட்சியளித்தால், தேன் பழுதாகி, பூஞ்சணம் பிடித்து விட்டது என்று நினைத்து என்று பலரும் எறிகிறார்கள். ஆனால் உண்மையில் கட்டித் தேன் தான் தரமானது.

தேனில் உள்ள குளுக்கோஸ், பிரக்டோஸ் ஆகிய இனிப்புகளின் செறிவு மிகவும் அதிகமாயிருப்பதால் அதில் குளுக்கோஸ் சீனித் துகள்களாக மாறுவது இயற்கையே. கூட்டில் இருக்கும்போதே தேன் கட்டியாகலாம்.

தேன் கட்டியாவதற்கு மூன்று காரணங்கள். வெப்பநிலை, பூக்களின் மகரந்தம், இரண்டு இனிப்புகளுக்குமான விகிதம்.

வெப்பநிலை பத்துச் சதம பாகைக்குக் குறைய தேன் கட்டியாகும். எனவே குளிர்சாதனப் பெட்டியில், குளிரான சமையலறை அலுமாரியில் வைக்காதீர்.

கட்டியான தேனை களியான தேனாக்க, அதைச் சூடாக்க வேண்டும். மைக்ரோவேவில் வைத்தால் அது சரியான அளவில் சமனாகச் சூடாகாது. எனவே, சூடான தண்ணீர் கொண்ட பாத்திரத்தில் தேன் போத்தலை வைத்தால் அது திரவமாகும்.

ஆனால் சூடாக்கிய தேன் மீண்டும் கட்டியாகும். அடிக்கடி சூடாக்கி, குளிர்ந்து கட்டியாக, தேன் அதன் சுவையை இழந்து விடுவதால், தேவையான அளவை மட்டும் எடுத்து சூடாக்கிப் பயன்படுத்தலாம்.

தேனை பிளாஸ்டிக் போத்தல்களில் வைப்பதை விட, கண்ணாடிப் போத்தல்களில் வைப்பது சூடாக்க உதவும்.

தேனில் உள்ள இரண்டு இனிப்புகளின் விகிதம், பூவுக்கு பூ வித்தியாசமானது. இதனால், ஒவ்வொரு வகைத் தேனும் கட்டியாவது வித்தியாசமாயிருக்கும்.

தேனீக்கள் தேனைச் சேர்க்கும்போது பூவில் உள்ள மகரந்தங்களும் ஒட்டி வந்து தேன் கூட்டில் நிறைகின்றன. மகரந்தத் துகள்கள் கட்டியாவதை ஊக்குவிக்கும். இயற்கையாய் சேகரிக்கும் தேனில் அதிகளவில் மகரந்தம் இருக்கும்.

கடையில் விற்கும் தேன் பார்ப்பதற்கு கவர்ச்சியாய் இருக்க வேண்டும் என்பதற்காக அந்த மகரந்தங்களை வடித்து எடுக்கிறார்கள். இதனால், தெளிந்த தேன் கட்டியாவது குறையும். அத்துடன் நீண்ட தூரங்களுக்கு விற்பனைக்கு அனுப்பலாம். சீனத் தேன் இங்கே கிடைப்பது இதனால் தான்.

கடையில் விற்கும் தேன் தெளிந்து அழகாய் இருந்தாலும், அவை பலவகைத் தேன்களின் கலவையே. விவசாயிகள் சந்தைகளில் விற்கும் தேனை வாங்குவது நல்லது. அவை கட்டியானாலும், வெவ்வேறு வகையான பூக்களில் இருந்து சேகரிக்கப்பட்டு, தனித்துவமான சுவையைக் கொண்டிருக்கும்.

எனவே எதிரிலிருக்கும் தேனைத் தொடப் பயப்படாமல், அங்கம் குளிர வாரியணைத்து அகமகிழுங்கள்.


‘இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்’



Palm Print

கவர்ச்சிகரமான வடிவமைப்புகள்!

நியாயமான விலை!

உறுதியளித்த நேரத்தில்!

பாம் பிரிண்ட்
அச்சுக் கலையகம்

416.284.9545

palmprint.ca
palmprintinfo@gmail.com
1345 Morningside Ave #8



# மரக்கறி பயிரிடுவீர்!

மரக்கறி பயிரிடுவதற்கும் நடிகைக்கும் என்னய்யா சம்பந்தம்? குஷ்புவின் படம் போட இதென்ன குமுதமா?

ஒருநாள் குளிர் விட்டேயாகும். பனி நீங்கி, பனி விழும் மலர் வனங்களில் மரக்கறி நாட்டலாம். அதற்கு நாள் இருக்கிறது, மே மாதம் வரைக்கும். இருந்தாலும், வீட்டுக்குள்ளேயே விதை நாட்டலாம்.

மிளகாய், கத்தரி, தக்காளி போன்றன நீண்ட நாட் பயிர்கள். அவற்றை இப்போதே விதைத்தால் தான் உண்டு. மே மாதம் விதைத்தால், முளை விட்டு வரும்போது மீண்டும் மலர் வனத்தில் பனி விழும்.

விதைக்கு வேண்டியது, ஒளி, வெப்பம், நீர்...

அடியில் துளையிட்ட பிளாஸ்டிக் பாத்திரங்கள்... நீர் தேங்காமல்!

மண்... தோட்டத்து மண் அல்ல. விதைகள் முளைக்க வைக்கவென்றே பைகளில் விற்கும் மண் கலவை.

விதைகளை ஒரு நாள் நீரில் ஊற விட்டு, பாத்திரத்தில் நிரப்பிய மண் மேல் மெதுவாக அழுத்தி மூட வேண்டும். ஆழமாய் புதைத்தல் ஆகாது. நீர் விட்டு...

ஒளி புகும் பிளாஸ்டிக் பையால் மூடி விட, நீர்ப்பதன் நிறைந்து, போதிய வெப்பத்தில் முளை வரும். சமையலறை ஜன்னலோரம் சிறந்த இடம்.

முளைத்த முளைகள் ஒளி நாடி வளர, நீண்டு மெலிந்து வளையும். இதனால், பாத்திரத்தை ஒவ்வொரு நாளும் திருப்பி வைக்கலாம்.

மே மாதம் போதியளவில் வளர்ந்து, பனி விழும் மலர் வனத்தில் நாட்ட, பூத்துக் குலுங்கிக் காயாகி... பணத்தைச் சேமிக்கலாம். இரசாயனம் கலக்காத சத்துணவு கிடைக்கும். உடற் பயிற்சியுமாகிறது.

மரக்கறிக்கு ஏன் நடிகையின் படம்?

பூசணிக்காய் படம் தேடிப் பார்த்தோம்,

கிடைக்கவில்லை. அதுதான்!

பணத்தைச் சேமிக்கலாம். இரசாயனம் கலக்காத சத்துணவு கிடைக்கும். உடற் பயிற்சியும் ஆகிறது.

# ஜன்னலை மூடுங்கள்,

## காற்று, கறுப்பு அண்டாதிருக்க!

இப்போதும் உங்கள் கம்பியூட்டர் விண்டோஸ் XP இல் ஓடிக் கொண்டிருக்கிறதா? உங்களைப் போல, உலகில் இணையத்தில் தொடர்பு கொள்ளும் கம்பியூட்டர்களில் 30 வீதமானவை இன்னமும் விண்டோஸ் XP இல் தான் செயற்படுகின்றன. விண்டோஸ் 7 பயன்படுத்துவோர் 47 வீதம். இருந்தாலும் மைக்ரோசொப்ட் விண்டோஸ் XP பாவனையாளர்களை தனது புதிய செயலியான விண்டோஸ் 8 க்கு மாற்ற முயற்சிக்கிறது. இதற்காக இனிமேல் விண்டோஸ் XP க்கான உதவிகளை ஏப்ரல் 8ம் திகதியுடன் நிறுத்தப் போவதாக அறிவித்திருக்கிறது.

விண்டோஸ் XP வெளியாகி 13 வருடங்கள் ஆகிறது. அதன் பின்னால் விஸ்ரா, 7, 8 என்றெல்லாம் அடுத்த தலைமுறைகள் வந்து விட்டன. இருந்தாலும், XP நம்பத் தகுந்ததாய், தலையிடி தராமல் இருந்ததால், பலரும் தொடர்ந்தும் அதையே பாவித்து வருகின்றனர்.



ஆனால், ஏப்ரல் 8ம் திகதியுடன் உங்கள் கம்பியூட்டர் செயலிழந்து போகும் என்பதில்லை. தொடர்ந்தும் செயற்படும். அதிலும் இணையத்தில் தொடர்பு ஏற்படுத்தாமல் இருந்தால், பயப்படவே தேவையில்லை. ஆனால், இணையத் தொடர்புகளுக்கு உங்கள் கம்பியூட்டரைப் பாவிப்பீர்களாயின், இணையம் மூலமாக உங்கள் கம்பியூட்டரைத் தொற்றும் வைரஸ்கள் போன்றவற்றின் ஆபத்துக்களுக்கு ஆளாகக் கூடும். இந்த நோய் தடுப்பு நடவடிக்கைகளை ஏப்ரல் 8 உடன் மைக்ரோசொப்ட் நிறுத்துகிறது.

எனவே விண்டோஸ் 7, 8க்குத் தாவி ஜன்னலை மூடுக, காற்றுக் கறுப்பு அண்டாதிருக்க!

# போவோமா ஊர்கோலம்?



கொட்டும் பனிக்குள் சறுக்கிச் சறுக்கி வாகனம் ஓட்டிய காலம் ஒருவாறு முடிவுக்கு வருகிறது. அப்பாடா என்று பெருமூச்சு விடுவதற்கு முன்னால், உங்கள் வாகனப் பராமரிப்புப் பற்றி கவனத்தில் எடுக்க வேண்டியன உண்டு.

பனியில் வாகனங்கள் சறுக்காதவாறு, பனியை உருக வைக்க தெருக்களில் அள்ளி வீசும் உப்பு வாகனத்தின் அடிப்பகுதியில் ஒட்டிக் கொண்டு, துருப்பிடித்தலை ஆரம்பிக்கும். துருப்பிடிக்க ஆரம்பித்தால், அதை நிறுத்துவது பெரும் கஷ்டம். எனவே, பனிகாலம் முடிந்ததும் முதல் வேலையாக, உங்கள் வாகனங்களை வாகனம் கழுவும் இடத்திற்குக் கொண்டு சென்று கீழ்ப் பகுதியை நன்றாகக் கழுவுங்கள்.

பனியுடன் ஒட்டிக் கொண்ட உப்பு, உங்கள் கால்களில் ஒட்டி, வாகனத்தின் உட்புறத்தின் நிலவிரிப்புகளில் ஊறி, உப்புப் படர்ந்திருக்கும். அதையும் முடிந்தால் கழுவி, நீர் உறுஞ்சி மூலம் காய வையுங்கள்.

குளிர் காலம் முழுவதும் கண்ணாடி கழுவியைப் பயன்படுத்தியிருப்பீர்கள்.

அதுவும் வெறுமையாகியிருக்கும்.

அதை நிரப்புங்கள்.

கார் இயந்திரத்தை மிருதுவாக இயங்க வைக்க, உராய்வு நீக்கி எண்ணெயை மாற்றுங்கள்.

குளிருக்குள் சோம்பல் பிடித்து எறியாமல், குப்பைக் கூடையாய் கிடக்கும் பின்புறத்தையும் ஒருதடவை காற்றுறுஞ்சியால் உறுஞ்சுங்கள்.

பளபளவென மின்னும் உங்கள் காரில் ஜன்னல்களைத் திறந்து... சத்தமாய் தமிழ்ப் பாட்டுடன் ஊர் கோலம் போக...

சே! அது ரூ மச்!

சிற்றுந்து சிறப்புற சில வழிகள்

# சுமை



துறவி ஒருவரும் சீடன் ஒருவனும் நெடுந்தூரம் பயணம் போய்க் கொண்டிருந்தார்கள்.

சீடன்… துறவியின் ஞானத்தை தன்னுள் வாங்கிக் கொள்ள ஆச்சிரமம் வந்தவன். துறவிக்குப் பணிவிடை செய்து பயின்று வந்தான்.

வழியில் ஒரு ஆறு. கடப்பதற்கு கலங்கலோ, பாலங்களோ இல்லை. ஆளே மூழ்கும் ஆழம்! அடித்துச் செல்லும் வேகமான நீரோட்டம்!

நடந்தே கடக்க வேண்டும்.

ஆற்றோரமாய் ஒரு அழகிய இளம் பெண்! அவளும் ஆற்றைக் கடக்க வேண்டும். ஆனால், நீரோட்டம் அள்ளிச் சென்று விடுமோ என்ற பயத்தில், கடக்காமல் நதியோரமாய் உட்கார்ந்து, யாராவது வர மாட்டார்களா? என்று எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள்.

துறவியையும் சீடனையும் கண்டதும், ஓடி வந்து, 'ஐயா, நான் இருட்டுவதற்கு முன்னால் ஆற்றைக் கடக்க வேண்டும், அக்கரையில் என் வீடு இருக்கிறது, எனக்கு உதவுங்கள்' என்று கேட்டாள்.

பெண்ணோ அழகி. சீடனோ இளையவன். இருந்தாலும், துறவு பூணும் ஆசையில் குருவின் பின்னால் வந்தவன். அவளைச் சுமந்து செல்ல அவனுக்கும் ஆசை தான்.

ஆனால்…

அந்தத் துறவி தானே அவனுக்கு பெண்ணாசையைப் பற்றி போதித்தவர். அவர் என்ன நினைப்பாரோ? என்ற எண்ணம் அவனுக்குள்.

தன்னையும் பெண்ணாசை பீடித்து விடுமோ என்ற பயம் மறுபுறம்.

இவன் இவ்வாறு யோசித்துக் கொண்டிருப்பதற்குள், துறவி சாதாரணமாகச் சொன்னார் பெண்ணிடம்!

'என் தோளில் ஏறிக் கொள்!'

சீடனுக்கோ அதிர்ச்சி. தனக்குப் பெண்ணாசை பற்றிப் போதித்த குரு, பெண்ணின் அழகில் மயங்கி விட்டாரே என்று.

பெண்ணைத் தோளில் ஏற்றிய குரு, ஆற்றுக்குள் வேகமாக நடந்தார். கழுத்தளவு தண்ணீரில்!

பெண் ஆடைகள் நனைந்து… கவர்ச்சிகள் தெரிய, துறவியை இறுக அணைத்துக் கொண்டிருந்தாள்.

சீடனுக்கோ கோபம். பெண்ணாசை எப்படி மனிதனை மாற்றுகிறது என்று. மறுபுறத்தில் பொறாமை. தான் தோளில் ஏற்றுவதற்கு முன்னால், தன்னைக் கேட்காமல், குரு பாய்ந்து கொண்டு உதவி செய்ய முன்வந்தாரே என்று.

சீடனின் மனப் போராட்டத்திற்குள் மறுகரை வந்து விட்டது. பெண்ணை இறக்கி விட்டு வேகமாய் தன் வழி நடந்தார் குரு. பெண் நன்றி சொன்னபடியே வீடு சேர்ந்தாள்.

பயணம் தொடர்ந்தது.

சீடனுக்கு மனக்குமுறல்…

தாளமுடியாமல் கேட்டான்,

'குருவே, பெண்ணாசை பற்றிச் சொல்லி விட்டு எப்படி அந்தப் பெண்ணை நீங்கள் ஏற்றிக் கொண்டீர்கள்?'

குரு நிதானமாகச் சொன்னார்…

'அவளை கரையில் விட்டிருந்தால், மிருகங்களிடம்… காட்டு மிருகங்கள், மனித மிருகங்களிடம் அவள் அகப்படக் கூடும். அதனால் தான் ஏற்றிக் கொண்டேன்.'

பயணம் தொடர்ந்தது.

சீடனின் மனம் உளைந்தது.

'குருவே, நீரில் நனைந்த அவளது உடைகள் அவளது கவர்ச்சிகளைக் காட்டி நின்றனவே, அவளது மென்மையான ஸ்பரிசம் உங்களுக்கு மனச் சஞ்சலத்தை ஏற்படவில்லையா?'

'அவள் என் தலைக்கு மேல் இருந்தாள். அதையெல்லாம் நான் கவனிக்கவேயில்லை. என் கவனமெல்லாம் என்னை நம்பி வந்த பெண்ணைப் பத்திரமாய் கரை சேர்ப்பதிலேயே இருந்தது.'

குரு வேகமாக நடந்து கொண்டேயிருந்தார்.

சீடன் மௌனமாக பின்தொடர்ந்து கொண்டேயிருந்தான். இருந்தாலும் அவன் மனம் அமைதியடையவில்லை.

'குருவே, நீங்கள் வயதானவர். நான் இளையவன். நான் அவளை என் தோளில் ஏற்றியிருந்தால், அதை உங்களால் ஏற்றுக் கொண்டிருக்க முடியுமா?'

துறவி சலனமில்லாமல் சொன்னார்…

'சீடனே, அவளை நான் எப்போதோ இறக்கி விட்டேன். நீதான் இப்போதும் அவளைச் சுமந்து கொண்டிருக்கிறாய்!'

# இணையத்திற்கு அகவை இருபத்தி ஐந்து!



1989, மார்ச் 12ம் திகதி சுவிட்சலாந்தில் உள்ள ஐரோப்பிய அணு ஆய்வு அமையத்தின் ஆய்வு கூடத்தில், உலகளாவிய கணனி வலையமைப்பைப் பயன்படுத்தி கணனிகள் ஊடாக எப்படி தகவல் பரிமாற்றம் செய்வது என்ற ஆய்வுக் கட்டுரை ஒன்றை ரிம் பேர்ணர்ஸ் லீ சமர்ப்பித்தார். உலகம் முழுவதும் உள்ள கணனிகள் இணைந்த ஒரு வலைப்பின்னலாய், படங்கள், ஒலிகள், வீடியோக்கள் என்பவற்றை உலகில் எவரும் பார்ப்பதற்கு வழி வகுத்தது இந்தக் கண்டுபிடிப்புத் தான்.

உண்மையில் இணையத்தின் ரிஷி மூலம் அமெரிக்க பல்கலைக் கழகங்கள், ஆய்வு மையங்கள், இராணுவம் என்பன தங்களுக்குள் கணனி மூலம் தகவல் பரிமாற்றம் செய்வதற்கானதே. ஆனால் இந்த தகவல் பரிமாற்றங்கள் வெறும் எழுத்துக்களாலேயே நடைபெற்றன. கணனித் திரையில் எழுத்து வரிகளாக அமைந்த இந்த இணையத்தை படங்கள், ஒலிகள், வீடியோக்கள் என இலகுவில் பார்க்க வைத்தது இந்த ஆய்வுக் கட்டுரையில் முன்வைத்த கருத்துக்களே. இதன் அடிப்படையில் எழுதப்பட்ட மொசாய்க் என்ற முதல் உலாவி தான் இணையத் தொடர்பை இலகுவாக்கியது.

பொதுமக்களின் பாவனைக்குத் திறந்த பின்னால், தற்போது இணையம் கூகிள் குறோம், நெற்ஸ்கேப் நவிகேட்டர், பையர்பொக்ஸ், சபாரி போன்ற பிரபல உலாவிகளின் உதவியுடன் உலவப்படுகிறது.

ஹப்பி பேர்த் டே இணையம்!

*முதன் முதல் இணையத்தில் படம் பார்க்கக் கிடைத்த வசதியைப் பயன்படுத்தி, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக கணனி ஆய்வு கூட விஞ்ஞானிகள் செய்த முதல் வேலைகளில் ஒன்று… அவர்களின் ஆய்வுகூடத்தில் உள்ள கோப்பி இயந்திரத்தில் கோப்பி இருக்கிறதா என்பதை தங்கள் கணனிமூலம் பார்க்க வசதியாக, அருகில் உள்ள கமெராவிற்கு இணைய இணைப்புக் கொடுத்தது தான்.*




**விழா மலர்கள்**
**அரங்கேற்ற மலர்கள்**
**நினைவுமலர்கள்**

கண்ணைக் கவரும் வடிவமைப்புகளில்…
கருத்தைக் கவரும் எழுத்து வன்மையுடன்…

**பாம் பிரிண்ட்**
**அச்சுக் கலையகம்**

**416.284.9545** 1345 Morningside Ave #8

Palm Print



# இலவச வருமான வரிச் சேவை!

அட, நீங்க ஒண்ணு, இதொன்றும் வியாபாரப் போட்டி விளம்பரமில்லை. வெறும் அட்வைஸ் மட்டும் தான்!

வரி கட்டும் காலக்கெடு நெருங்கி விட்டது. உங்கள் வேலையிடத்தில் கடந்த வருட வருமானத்திற்கான சீட்டுத் தந்திருப்பார்கள். கவனிப்பீர்களாயின், உங்களுடைய மொத்த வருமானமானது, மணி நேரச் சம்பளக் கூட்டுத் தொகையை விட அதிகமாயிருக்கும். காரணம், சம்பளத்தை விட மேலதிக சலுகைகள் கிடைத்திருக்கும். அவற்றை உங்கள் நிறுவன உரிமையாளர் அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும். ஆனால், எல்லாவற்றுக்கும் நீங்கள் வரி செலுத்தத் தேவையில்லை.

உங்கள் நிறுவனம் சகல தொழிலாளர்களுக்கும் ஆயுள், கடும் நோய், விபத்து என்பவற்றுக்கான காப்புறுதிக்கு பணம் செலுத்தியிருந்தால், அந்தப் பணத்திற்கு நீங்கள் வரி கட்ட வேண்டும். ஆனால், பல் சிகிச்சை, உடல் நலம், நீண்ட கால சுகவீனம், மருந்துகள் போன்ற காப்புறுதிக்கு செலுத்தியிருந்தால், அந்தப் பணத்திற்கு நீங்கள் வரி செலுத்தத் தேவையில்லை. சுகவீனமுற்று, குறுகிய கால, நீண்ட கால சுகயீனக் காப்புறுதி மூலம் நீங்கள் பணம் பெற்றிருந்தால், அதற்கான பணத்தை உங்கள் நிறுவனம் செலுத்தியிருந்தால் அதற்கு வரி செலுத்த வேண்டும்.

வருட இறுதியில் உங்கள் சேவையைக் கௌரவித்து, விருதுகளுடன் பணம் மற்றும் போனஸ் தந்தால், அவையும் உங்கள் வருமானமாகவே கருதப்படும்.

ஆயினும், திருமணம், அல்லது சிறந்த தொழிலாளர் விருது ஆகியவற்றிற்காக தரும் பணத்தில் வருடாந்தம் ஐநூறு டொலர் வரைக்கும் வரி இல்லை. (பணம் கிடைக்கும் என்பதற்காக வருடாந்தம் திருமணம் செய்யத் தேவையில்லை!)

உங்களின் மேற்படிப்புக்காக சில நேரம் உங்கள் தொழிலிடத்தில் பணம் தரக் கூடும். ஆனால் அந்த மேற்படிப்பு உங்கள் தொழிலுடன் சம்பந்தப்பட்டிருந்தால் மட்டுமே அதற்கு வரி விலக்கு உண்டு. இல்லாவிடில், அது வருமானமாகவே கருதப்படும். உங்கள் பிள்ளைகளுக்கு புலமைப் பரிசிலை உங்கள் தொழில் இடம் வழங்கினால், அதற்கு வரி செலுத்தத் தேவையில்லை.



# இனிப்பான சீனி பற்றி... ஒரு கசப்பான சேதி!

இனிப்புப் பிரியர்களுக்கு வயிற்றில் புளியைக் கரைக்கும் செய்தி ஒன்றை உலக உடல்நல அமையம் வெளியிட்டிருக்கிறது. தினசரி உட்கொள்ளும் சீனியின் அளவை ஆறு தேக்கரண்டிகளுக்கு குறைவாக்கும்படி!

இது ஒரு கொக்கோ கோலாப் பேணிக்குள் உள்ள சீனியின் அளவை விடக் குறைவாகும். குழந்தைகளை மூன்று கரண்டி மட்டுமே உண்ணும்படி உலக உடல்நல அமையம் மேலும் கூறுகிறது.

ஆரோக்கிய வாழ்வுக்கு சீனியின் அளவைக் குறைப்பது அவசியம். உடல் பருமனடைதல், பல் நோய், நீரிழிவு நோய், இருதய நோய், புற்றுநோய் என பல நோய்களுக்கு சீனி முக்கிய காரணியாகிறது.

கனடியர்கள் (தமிழ்க் கனடியர்கள் உட்பட!) தினசரி 26 தேக்கரண்டி சீனி உட்கொள்கிறார்கள்.

அப்பாடா! நல்ல காலம், நான் ஒரு நாளைக்கு மூன்று தடவை, இரண்டு கரண்டி சீனியோடு தான் தேனீர் குடிக்கிறேன் என்று தப்பித்ததாய் மெச்சிக் கொள்ளாதீர்கள்.

இந்த ஆறு கரண்டிக் கணக்கு வெறும் தேநீர்க் கோப்பைக்குள் சீனியாக மட்டும் அல்ல! குடிக்கும் ஜூஸ்கள், கடிக்கும் பழங்கள், தித்திக்கும் தேன், சுவைக்கும் இனிப்புகள் என பலவற்றையும் சேர்த்துத் தான்!

சீனி நிறைந்த பானங்களால் வயிறு நிறைந்து, சத்துணவை உண்ணும் விருப்பு குறைந்து விடுகிறது.

அட, இந்தச் செய்தி என்ன கசப்பாய் இருக்கிறதா? மருந்து கசக்கத் தான் செய்யும்! (உண்மையைப் போல!) கொஞ்சமாய் சீனி தடவிச் சாப்பிடுங்கள்!



## 'பின்' குறிப்பு

தொடங்கி இரண்டு ஆண்டுகள் தான், அதற்குள் பாம் பிரிண்ட் அச்சுக்கலையகம் தமிழ் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்திருக்கிறது. நியாயமான விலையில், கவர்ச்சிகரமான வடிவமைப்புகளில், குறித்த நேரத்தில் அச்சுவேலைகளை முடித்துக் கொடுக்கும் எங்கள் சேவை தமிழ் மக்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

ஸ்காபரோ பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான கனடிய வியாபார, தொழில் நிறுவனங்களைச் சென்றடைவதற்காக, Palm Reading என்ற ஆங்கிலச் செய்தி இதழை வெளியிட்டு, கனடா போஸ்ட் மூலமாக வினியோகித்துப் பெரும் வரவேற்பைப் பெற்றிருந்தோம்.

அதேபோல, எங்கள் தமிழ் மக்களைச் சென்றடையவும், எங்களுக்கு ஆதரவு தரும் வர்த்தக, தொழில் பிரமுகர்களின் பிரசுரங்களை காட்சிப்படுத்தவும் இந்த ஏட்டை வெளியிடுகிறோம்.

தமிழ் மக்களுக்குப் பயன்படக் கூடிய, அறிந்து கொள்ள வேண்டிய விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

கடந்த இரண்டாண்டுகளில் எங்களிடம் அச்சிட்டுப் பயன் பெற்ற பல நூற்றுக்கணக்கானோர் போல, நீங்களும் பயன் பெறுங்கள். உங்கள் விளம்பரப் பிரசுரங்களும் எங்களும் வெளியீட்டில் காட்சி பெறும்.





# Palm Print Inc
Design & Print




• Business Cards • Flyers
• Post Cards • Pocket Folders
• A-Frames • Posters • Signs
• Banners • Books • Tickets
• Magazines • Cake Boxes
• Letterheads • Invoices
• Wedding Invitations
• Envelopes • Labels
• Magnets • Certificates
• Note Pads • Calendars
• Photo Mugs • Photo T-shirts

**Logo Design**
**Ad Design**

**416.284.9545**
**1345 Morningside Ave #8**
**palmprint.ca**
**palmprintinfo@gmail.com**



This newsletter is edited, printed and published by Palm Print Inc.

இச்சுவடி பாம் பிரிண்ட் நிறுவனத்தினரால் ஏடு இட்டு, அச்சிட்டு வெளியிடப்படுகிறது